


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யதார்த்தம்

மூதூர் எம். எம். ஏ. அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | - | யதார்த்தம் |
| விடயம் | - | கவிதை |
| ஆசிரியர் | - | மூதூர் எம்.எம்.ஏ.அனஸ் |
| அட்டைப்படம் | - | விஜே |
| வெளியீடு | - | மூதூர் கலை இலக்கிய ஒன்றியம் |
| உரிமை | - | ஆசிரியருக்கு |
| முதற்பதிப்பு | - | ஜனவரி - 2016 |
| விலை | - | 200.00 |
| ISBN | - | 978-955-41569-6-8 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

மானுட சமூகத்தில் உண்மை, நேர்மை நீதி, நியாயம் போன்ற மனுதர்மங்கள் தளைத்தோங்க வேண்டும். பொய்யும், புரட்டும், ஏமாற்றும் வஞ்சகமும் இல்லாத நிலைமை உருவாக வேண்டும். எங்கும் எதிலும் எப்போதும் சத்தியமே முன்னணியில் திகழ வேண்டும் மனிதர்க்கு மனிதர்களே கொடுமை செய்யும் பொல்லா நிலை பொசுங்கிப்போக வேண்டும் என்ற உன்னத உணர்வுகள் என் உள்ளத்தை நெருடிய பொழுதுகளிலும், வஞ்சனைகளும், துரோகங்களும் பொறாமைகளும் என்னைத் தாக்கிய வேளைகளிலும், என் இதயம் வடித்த கண்ணீர்த்துளிகள தான் கவிதைகளாக இந்நூலில் அதிகம் இடம்பிடித்துள்ளன.

புனிதர்களாய் நடிக்கும் போலி வேசமிட்டோர் இந்தப் புவியின் சாபக்கேடாய் ஆனவர்கள் தம் மரணத்தை மறந்து இன்னும் ஆயிரம் வருடங்கள் வாழப்போகும் வாஞ்சையுடன் இருக்கும் இவர்கள், தம்மை மனித மகத்துவத் தன்மைகளால் ஒரு போதும் அலங்கரித்துக் கொண்டது கிடையாது. நல்லவர்களை நசுக்குவதும், அநீதிகளுக்குப் பக்கவாத்தியம் பாடுவதும் பழக்கமாகிப் போன சமூகத்தில் காயப்பட்ட ஓர் உள்ளத்தின் கண்ணீர்த்துளியாகிய யதார்த்தம் எனும் இந்நூல் மனித மனங்களை மானுடத் தன்மையின் பால் ஓர் அங்குலமாவது இழுத்துச் செல்லுமாயின் அது என் எழுத்துப்பணிக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகவே அமையும்

நன்றி

**பெரிய பாலம்**
**மூதூர் - 05**
**தொடர்பு – 0776288299**

**மூதூர் எம். எம். ஏ. அனஸ்**
**01 - 01 - 2016**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

ஊரில் உன்னத ஆசிரியராய் திகழ்ந்து ஓய்வு பெற்ற என்னாசிரியர் அல் - ஹாஜ் மஹ்மூது சாகுல் ஹமீது அவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேதனையின் வெளிப்பாடுகள்

நான்
வாய்மை வானின் வளர்மதி
அதனால்
கொடுமைக் காரிருளை அகற்றுவதே
என் பணி

நான்
நம்பிக்கைக் கால்களாலேயே
நசிக்கப்பட்ட நறுமணச் செடி
அதனால்
வாக்குறுதி மழை
எனக்கு ஏமாற்றம்

நான்
பொறாமைக் கற்றால்
தீண்டப்பட்ட தடாகம்
அதனால்
என் தளம்பல்கள் யாவும்
வேதனையின் வெளிப்பாடுகள் தான்

நான்
பணப்பேய்க்குப்
பலியாக்கப்பட்ட கடா
அதனால்
நான் சிந்தும் உதிரம்
தர்மத்தின் ஊற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எத்தனையோ துரோகங்கள்......!

என் வாழ்க்கைப் பயணத்தில்
எத்தனையோ துரோகங்கள்
எத்தனையோ துரோகத்தில்
எதையும் நான் மறக்கவில்லை

அரசியலால் ஊரை
அலங்கரிக்க முயன்றேன்
அலங்கரிக்க முயன்றதனால்
அவஸ்த்தைகளை அடைந்தேன்

ஊர்ப்பாசம் மிஞ்சியதால்
உயர்த்த அதை உழைத்தேன்
உயர்த்த அதை உழைத்ததனால்
உள்ளதையும் இழந்தேன்

சந்தர்ப்ப வாதிகளை நானும்
சத்தியவான்கள் என நம்பினேன்
சத்தியவான்கள் என நம்பியதால்
சதிகளிலே மாட்டினேன்

துட்டர்களின் உள்ளத்தைத்
தூய்மை என் எண்ணினேன்
தூய்மை என எண்ணியதால்
துன்பத்தில் மாட்டினேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை நேர்மைகளால்
உயர்நெறியில் நின்றேன்
உயர்நெறியில் நின்றதனால்
உரிமைகளை இழந்தேன்

பணத்தாசைப் பேய்களினால்
பல துன்பம் அடைந்தேன்
பல துன்பம் அடைந்ததனால்
பக்குவத்தைப் பெற்றேன்

வஞ்சகரின் வம்புகளால்
வாய்ப்புக்களை இழந்தேன்
வாய்ப்புக்களை இழந்ததனால்
வலுவிழந்து போனேன்

அற்பர்களுக்குப் பவுசுவர
அடிப்படையாய் ஆனேன்
அடிப்படையாய் ஆனதனால்
அடிபட்டுப் போனேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வஞ்சக நெஞ்சங்களே!

என் வஞ்சக நெஞ்சங்களே!
சமாதானத் தென்றலுக்குச்
சாளரம் திறக்கும் நான்
உங்களுக்கெதிராய் மட்டும்
போர்க் கொடியை உயர்த்துகிறேன்

உங்கள் நாமங்களை
என் உளக்கல்லில்
என்றும் அழியா வண்ணம்
செதுக்கியுள்ளீர்கள்

பலரின் பாசப் பாஞ்சாலியையும்
கற்புக் கண்ணகியையும்
ஒரே பஞ்சனையில்
துயிலச் செய்ய
உங்களால் எப்படி முடிகிறது

துரோகக் களைகளின்
விளைநிலமான நீங்கள்
செந்நெல்லின் செழுமை பற்றி
செப்புகின்றீர்களே!

வஞ்சகப் பாம்புகளின்
வாழ்விடப் புதராய்
உங்கள் உள்ளம் இருக்கும் போது
வாய் வார்த்தைகளில் மட்டும்
எப்படிப் பால்சொட்டச் செய்கிறீர்கள்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள்!
போற்றிய போது
என் உள்ளம்
உடைந்தது

நீங்கள்
கரகோசம் செய்த போது
அது
என் இதயத்தில்
இடியாய் இடித்தது.

என்
உயர்வுச் சுடரை அணைக்கத்
தினமும்
சூறாவளிச் சூழ்ச்சிகளா?

பொறாமைக் கரங்களால்
என் மேன்மை நதியைத்
தடுக்கத் திட்டமா?

இயலாமைச் சிகரத்தில் இருக்கும்
என் இலட்சிய ஊற்று
சமூகத்தின் அவலத்தை
அடித்துச் செல்லும் பிரளயமாய்
தக்க சமயத்தில் பெருக்கெடுக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் எனக்காக
அரசியல் ஆடையை அணியவில்லை
ஏழ்மைக் கூதலில் வாடும்
எம் இனத்தின்
போர்வையாகவே போர்த்தினேன்

எனக்கு அரண்
என் நேர்மை
அதனால்
என்றும் காக்கப்படுவேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என்றும் நல்லவர்களாய்**
**எங்கள் தலைவர்கள்**

தம்
கருமைத் தவறுகளுக்கு
நியாய வெண்மைகள் பூசுவதால்
என்றும் நல்லவர்களாய்
எங்கள் தலைவர்கள்

அறியாச் சமூகமும்
தம் வாழ்த்துப் பூக்களை
இவர்கள் மேல் தூவிக் கொண்டிருப்பதனால்
அதிகார வாடைகளின்
சொந்தக்காரர்களாய்
தொடர்ந்தும்
எம் தலைவர்கள்.

சமூகத்தின் விடிவு என்ற
மாய வார்த்தைக்குள்
தங்கள் அதிகாரத்தையும்
வளவாழ்வையும்
தக்க வைத்துக் கொண்டிருப்பவர்கள்
எம் தலைவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலட்சியம்

கொள்கையைக் காக்க
இலட்சியமாய் இருந்த போது
இகழ்ச்சி முட்களால்
இம்சிக்கப்பட்ட அவன்
உழைப்பது போல் நடித்த போது
எல்லோரினதும்
ஆசிர்வாதங்களுக்கும்
அருகதையானவனாய்
ஆகிப் போனான்.

## ஏமாற்றம்

தியாக மலர்களை
இலட்சிய நூலில்
மாலையாய்த் தொடுத்து
தலைமைத்துவக் கழுத்தில்
சூட்டிய பின்பு தான்
புரிந்து கொண்டோம்
அது குரங்கின் கழுத்தென்று

## தலைமை மேகங்கள்

சமூகச் செழுமைக்குச்
சேவை மழை பொழியக்
கிளர்ந்தெழுந்த
தலைமை மேகங்கள்
பணக் காற்றினால்
எங்கோ
அடித்துச் செல்லப்படுகின்றன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் தலைவர்கள்

எங்கள் தலைவர்கள்
செல்வத்தின் செழிப்பில்
வாழ்கின்றனர்

எங்கள் உரிமைகளை
விற்கும் விலையின்
நிகர இலாபத்தினால்

## சிபாரிசு

அவர்களின் உயர்ச்சிகள்
சிபாரிசுகளால் சிங்காரிக்கப்படுவதால்
திறமை என்பது
அவர்களுக்குத்
தேவையற்ற ஒன்றாகிவிட்டது

## தேர்தல் களனி

எம் சமூகத்
தேர்தல் களனியில்
இன்று......
புல்லுருவித் தலைமைகள்தான்
அதிகம் அறுவடையாகிக்
கொண்டிருக்கின்றன

இதனால்
வறுமையும்
விருத்தியிலா நிலையும்
அதன் அடையாளச் சின்னங்களாய்
ஆகிவிட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்சித் தொண்டர்கள்

அரசியல் விளையாட்டில்
வெற்றிச் சலுகையில்
சஞ்சரிப்பவர்கள்
தலைமை வீரர்கள் மட்டுமே!

பாவம்......
பார்வையாளர்களாய் மட்டும்
கட்சித் தொண்டர்கள்

## எட்டாப் பழம்

எம் தலைவர்களின்
ஏற்றத்திற்கு ஏணியாய் மட்டும்
நாங்கள் இருப்பதனால்
உயர்ச்சிகள் என்பது
எங்களுக்கு
எட்டாப் பழமாகவே இருக்கிறது

பதவிக் கனிகளை நுகர்வதற்காக
அவர்கள்
எம் தலைகளைப்
படிக்கட்டுக்களாகத்தானே!
பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புகழ்ச்சி உரம்

சமூகச் சோலையின்
தலைமைத் தருக்களுக்கு
புகழ்ச்சி உரங்கள்
அதிகம் இடப்படும் போது
அவை தன்நிலைகுன்றித்
தளர்ந்து போகிறது

## சந்தர்ப்ப வாதம்

வாழ்க்கைத் தோப்பின்
வசந்தத்தில்
செல்வ மலர்களை ருசிக்கும்
தோழமை வண்டுகள்
அதன் இலையுதிர் காலத்தில்
ஆங்கு
நடமாடவே மாட்டாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம் மக்கள்

நம் மக்கள்
அரசியல் இருளில்
வாழ்வு மாளிகையின்
திறவுகோளைத் தேடிக் கொண்டிருக்கின்றனர்

நம் மக்கள்
கட்சிக் கருத்துக்களை எல்லாம்
வேத வாக்கியங்களாய்
வியாக்கியானம் செய்கின்றனர்

நம் அரசியல் அரங்கில்
கற்றவர்கள் கூட
தம் சிந்தனையை உறங்க வைத்துவிட்டு
உணர்ச்சிகளின் உச்சத்தில்
உலாவிக் கொண்டிருக்கின்றனர்

நம் மக்கள்
அரசியலின்
சுயநலத்துப் பேய்களிடம்
சேவைக் கருணையை
எதிர்பார்த்துள்ளனர்

நம் மக்கள்
அரசியல் இருளை
அரவணைத்துக் கொண்டல்லவா
பிரகாசத்துக்காகப்
பிரார்த்திக் கொண்டிருக்கின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் மக்கள்
நிழல் என நம்பியிருக்கும்
இந்த அரசியல் வேம்பு
அவர்கள் வாழ்வை அழிக்கும்
பேய்களின் புகழிடமாய் அல்லவா உள்ளது

நம் மக்கள்
இந்தச் சுயநலப் பாம்பரசியலுக்கு
இன்னும் எத்தனை காலம்தான்
பால் வார்க்கப் போகின்றனரோ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறந்து போன மானுடக் கீதம்

அவர்கள்
சொத்துக்குச் சோபனம் இசைப்பதனால்
மானுடக் கீதத்தை
மறந்து விட்டனர்

பணப் பாவையை ஆசிப்பதனால்
நீதி நங்கையை
நிர்க்கதியாக்கி விட்டனர்

செல்வச் சேகரிப்புக்காய்
மனச்சாட்சியை
விலையாக்கிக் கொண்டிருக்கின்றனர்

அவர்கள் இதயக் கொற்றம்
ஆஸ்தியின் ஆட்சிக்கு
ஆதரவு நல்குவதால்
அங்கு
மனுதர்மங்களுக்கு
மகத்துவம் கிடையாது

அவர்கள் தம் மனச்சாட்சி மரங்களை
சொத்துப்பேய்களுக்குச்
சொந்தமாய்க் கொடுத்துள்ளதால்
நியாயப்பட்சிகள்
அங்கு நிலை கொள்வதே இல்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள்
அவர்கள் புன்னகை இதழ்களுக்குள்
முட்கள்
முக்காடிட்டிருப்பதனால்
அவர்களை நெருங்குகின்றவர்கள்
நோவினை அடைகின்றனர்

அவர்கள் வார்த்தை வயல்களில்
வஞ்சகக் களைகள்
வளர்ச்சியுற்றிருப்பதனால்
பண்புப்பயிர்களின்
வளர்ச்சிக்கு
ஆங்கே
வாய்ப்பே இல்லாதிருக்கின்றது.

அவர்களின் உள்ளப் புதர்கள்
வஞ்சகப்பாம்புகளின்
வாழ்விடமாய் இருப்பதனால்
அவர்களுடன்
பழகுகின்றவர்கள்
தீண்டுதலுக்குள்ளாகின்றனர்

அவர்களின்
நெஞ்சப் பொய்கை
அடுத்தோர்
உயர்வுத்தென்றலைத்
தாங்க முடியாமல்
தினமும்
தளம்பிக்கொண்டிருக்கின்றது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் எப்போதும் தங்கள்
நலத்தின் பக்கமே
மனச்சாட்சித் தராசின் முட்களை
முனைந்து
அமிழ்த்திக் கொண்டிருக்கின்றனர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வறண்ட காலம்

இது
என் வாழ்க்கைத் தோப்பின்
வறண்ட காலம்

அதனால்
உயர்ச்சி மலர்களைப்
புஷ்ப்பிக்க முடியாமல்
முடங்கிக் கிடக்கின்றேன்

தொடர்ந்தேர்ச்சியாய்ச்
சதியின் கரங்களாலும்
தீண்டப்பட்டுக் கொண்டிருக்கின்றேன்

எனினும் என் வாழ்வுத் தோப்பில்
வசந்தமழை பொழியும்
என்ற நம்பிக்கையில்
வாழ்ந்து கொண்டிருக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநியாயத்தை ஏன்? ஆசிக்கின்றீர்கள்

தலைவர்களே.........
உங்கள் தலைமைத்துவத்திற்கு கட்டுப்பட்டவன் தான் நான்
அதற்காக
உங்கள்
அநியாயக்காரர்களுடன் மட்டும்
ஒன்று படுமாறு
என்னைப் புணிக்காதீர்கள்

இந்த அநியாயகாரர்களின்
கொடூரங்களில் நான்
நல்லோர்களின் அழுகுரலைக்
கேட்டுக் கொண்டிருக்கின்றேன்

அநியாயத்தை
என்னால்
ஜீரணிக்கவே முடியாது

சத்தியம் என்
இதயத்திடம்
நீதி கோருகிறது

அவர்களின் கொடுமையின்
தடயங்கள் தலைத்துவத்தின் தலையில் அல்லவா பதிகிறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத்துவம்
ஆண்டவனின் கொடையல்லவா
அதற்கு அருகதையான நீங்கள்
அநியாயத்தை ஏன்? ஆசிக்கின்றீர்கள்

தலைமைத்தவத்திற்கு
கருணை தேவைதான்
அதற்காக
கள்வர்களுக்குக் கருணையா?
துட்டர்களுக்குத் துணையா?

ஆதரவாளர்கள் அதிகம் தேவைதான்
அதற்காக
அயோக்கியர்களையா? அரவணைப்பது?

சத்தியத்திற்குத்தான்
உங்களைக் காவலாக வைத்தோம்
அசத்தியத்திற்கல்லவா!
ஆதரவளித்துக் கொண்டிருக்கிறீர்கள்

அயோக்கியர்களின் ஆதரவுடன்
ஜெயிப்பதை விட
தோல்வியைத் தழுவிக்கொள்வது
உன்னதம் என்பதை
ஏன் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தர்ப்பவாதம்

நண்பர்களே...... நண்பர்களே!
இதுவரை காலமும்
இலட்சியத்தின் இருப்பிடமாய்
இருந்த நாங்கள்
சந்தர்ப்பவாதம் பற்றிச்
சற்று பேசுவோம்

இலட்சியங்களின்
இறந்தகாலம் இன்றாகும்

கொள்கைகளைக் காத்த நல்வர்கள் தான்
நாங்கள்
ஆனாலும் இன்று
சந்தர்ப்பவாதத்தைச் சரி காண்போம்

ஏனெனில் சந்தர்ப்பவாதம் தான்
இப்போது இங்கே
மெச்சப்படுகிறது

இலட்சியவாதிகள்
இழிந்தோராய்
நோக்கப்படுகின்றனர்

சந்தர்ப்பவாதத்தைத் தவிர்த்துக் கொண்டு
வளமாக வாழ முடியாது
அதனால் அன்போடு
அதனை ஆசிப்போம்

சந்தோச வாழ்விற்கு
சந்தர்ப்பவாதம் தான்
சரியான வழியென்று
நம் சந்ததிகளுக்குச்
சொல்லி வைப்போம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைமைத்துவம்

தலைமைத்துவம்
மனித மகத்துவத்திற்குக்கிடைத்த
பொற்கிழி

இது
மானுடத்தின் மேன்மைக்கு
ஆண்டவன் அளித்த
அருட்கொடையின்
உயர்வடிவம்

மனித உணர்வுகளை நெறிப்படுத்தும்
மந்திரக்கோல்

மனிதம்
நன்னெறிக்கரை காண
வழிகாட்டும்
கலங்கரை விளக்கு

தலைமைத்துவம்
சமூகத்தின் தலையில்
சூட்டப்படுகின்ற கிரீடம்

தகுந்த தலைமை கிடைக்கும் போது
சமூகத்தின் காலடியில்
அபிவிருத்தி மண்டியிடும்
வெற்றியின் சிகரத்தில்
சமூகம் உலாவரும்

ஓர் சமூகத்தின் தலைவிதி
அதன் தலைமையின் கரத்தில்த்தான்
எழுதப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித ஓணான்கள்

இந்த மனித ஓணான்கள்
எதற்காகத் தம் நிறங்களை
அடிக்கடி மாற்றிக் கொள்கின்றன

எந்த உயர்ச்சியை அடைய
இவை இவ்வாறு செய்கின்றன

சந்தர்ப்ப வாத உலகில்
தன்னை நிலை நிறுத்திக்கொள்ள
தக்க சாதனம் தான் இதுவா?

இலட்சியக் கொள்கைகள்
அலட்சியப்படுத்தப்படும்
சமூகத்தில்
இந்த நிறமாற்றம் தான்
நியாய வழியாகிறதோ !



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## என் கொள்கையின் தாக்கம்

என் இலட்சியப் பயணத்திற்கு
ஆதரவுகள் இல்லை
வாழ்த்துக்களுக்குப்பதிலாக
வசை மாரிகளைத்தான்
என் மேல்
பொழிகின்றனர்
எனினும்
காதைச் செவிடாக்கிக் கொண்டு
பாதச்சுவடுகளைப் பயணப் பாதையில்
பதித்துக் கொண்டிருக்கின்றேன்

என்னைச் சூழ்ந்து எப்போதும்
எதிரிகளின் விமர்சனங்கள்
இருந்துக்கொண்டிருப்பதால்
என் கொள்ளையின் தாக்கம்
அவர்களை ஆக்கிரமித்துள்ளது
என்பதை மட்டும் அறிந்து கொள்கின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபூர்வ மனிதர்கள்

இந்த மனிதர்கள் மிகவும் அபூர்வமானவர்கள்
இயலாமையின் கரத்தைப் பற்றிக் கொள்வார்கள்
சாதனைப்படைப்பதற்காக

சாதனை வீரர்களைத் தேடிப்பிடிப்பார்கள்
அவர்களின் கரங்களை
ஒடிப்பதற்காக

சத்தியத்தின் சான்றுகளான
நல்லோர்களிடத்தில் கறைகளை கண்டுபிடிப்பார்கள்
தங்களை கனத்தில் உயர்ந்தோர்களாய்க்
காட்டுவதற்காக

ஆதலால் இந்த மனிதர்கள்
மிகவும் அபூர்வமானவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெரிந்து கொள்ளாமல்

எதற்கும் அஞ்சாத்
தானைத் தலைவன் என்றேன்
என்னுடன் தான் நீ
மோதப் போகிறாய் என்பதைப்
புரிந்துகொள்ளாமல்

வேதனையில் ஜெயித்த வீரன் என்றேன்
என் சத்தியத்தையே நீ
தகர்க்கப் போவதைத்
தெரிந்து கொள்ளாமல்

## வியப்புறும் விடுதலை

அதிகாரத்தின் கரத்தில்
எம் சுதந்திரக்கனிகளைத்
தாரை வார்த்துக் கொடுத்துவிட்டு
சலுகைக் காய்க்காய்க்
கை நீட்டி நிற்கும்
எங்கள் தலைமைகள் கண்டு
வியப்புறுகிறது........... விடுதலை

## ஏன்

ஊரின் அபிவிருத்தியை
அதிகரிக்க
அவாக் கொண்ட வாக்காளர்கள்
அவலத்தால் அது
ஆசிர்வதிக்கப்படுவதை
அறிந்தும் அறியாதவர்களாய்
இருந்து கொண்டிருப்பது ஏன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வஞ்சக முட்கள்

என் அரசியல் பயணப்பாதையில்
வஞ்சக முட்கள்
பரப்பப்பட்ட போது
என் பாதச்சுவடுகள்
பதிந்த இடமெல்லாம்
கண்ணீர் ஊற்றுக்களாகி
நீதிக்காய் மன்றாடியது

## நிதானத்தின் மௌனம்

உணர்ச்சிகளின்
உரத்த ஓசைகளை விட
நிதானத்தின் மௌனத்திற்கு
மதிப்பளிக்கும் காலம்
மலரும் போது.........
சமூகத்தின் சிந்தனைக்கண்
திறந்து விட்டதாக உணரப்படும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனத்துவ அரசியல்

பாமர மக்களைப்
பகடைக் காய்களாய்ப்
பயன்படுத்தும்
இனத்துவ அரசியல்
சமூகத்தின் எழுச்சியை
இல்லாமல் செய்து விடுவதில்லை

உண்மையின் உணர்வுகள்
உரம் பெற்ற............
வெளியாகும் போது
வீடுகள் தோறும்
விளக்கம் ஒளிரும்
ஏமாற்றமென்பது
எங்கோ மறையும்

## நற் தொண்டன்

நீ................. தலைமை தந்தாய்
நான்............ நற்தொண்டனானேன்

சமூகத்தை
முன்னேற்றத்தின் முகட்டிற்கு உயர்த்த
அதிகார ஏணி கேட்டேன்
நீயோ....
படுகுழியில் அடைக்கலமாக
எனக்கு ஆணையிட்டாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல்

அரசியல் என்பது
இன்று......... ஓர்
வியாபாரப் பண்டம்

தலைவர்கள்
தங்கள் அரசியலுக்கு
ஆடை அணிவிக்கிறார்கள்

விடுதலை சுபிட்சம்
சுதந்திரம் 'என்ற வார்த்தை ஜாலத்தில்
பாமர மக்களை
மயக்கி விடுகிறார்கள்

## வார்த்தை ஜாலங்கள்

சுயநலத்துச் சொந்தங்களின்
வார்த்தை ஜாலங்கள்
எனக்கு
வியப்பாய் இருக்கிறது

பனை மரத்தில்
பறிக்கப்படுவதெல்லாம்
தேங்காய்கள் எனத்
தர்க்கிக்கிறார்கள்

இங்கே
உச்சாப்பு மடயர்கள்
உண்மை புரியாமல்
உணர்ச்சிப் போதையில்
சமூகத்தைச் ..............
சாக்கடையாக்கிக் கொண்டிருக்கிறார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சதியின் கரங்கள்

சமூகத்தை உயர்த்தத் தீட்டிய
எங்கள் உன்னதத் திட்டங்களைச்
சதியின் கரங்கள்
கிழித்தெறிந்து விட்டன

எங்கள் இலட்சியங்களைப்
புதைத்து விடுவதற்காகவே
இங்கே ...............
வஞ்சகக் குழிகள்
நித்தமும் தோண்டப்படுகின்றன

எத்தனையோ
துரோக முட்களைப்
பாதைகளில் பரப்பினாலும்
எம் பயணங்கள்
பரிணாம வளர்ச்சி கண்டு கொண்டே இருக்கும்

பரிசுத்த வான்களைப்
பலமிழக்கச் செய்துவிடுவதனால்
உண்மைகள்
மடித்து விடுவதில்லை

இயற்கையின் நியதிகள்
இயங்கத் தொடங்கும் போது
கொடுமையின் கரங்கள்
கொடும் விலங்கின் உடமையாகும்

அப்போது
உண்மையின் உயர்வை
உலகம் உணர்ந்து கொள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாதத்தின் புதைகுழி

அகதி வாழ்வின்
அவலம் நீங்க
சமாதானத்தை ஆசித்து நிற்கும்
ஆத்மாக்களே!

உங்கள் வாழ்வு
வசந்தத்தால்............
ஆசிர்வதிக்கப்பட
நீங்கள்
பயங்கரவாதத்தின் புதைகுழியாய்ப்
புத்துயிர்ப்படைய மாட்டீர்களா?

## அநியாயத்தை அரங்கேற்றியவர்கள்

நல்லோரை நசுக்கிவிட்டு
அநியாயத்தை அரங்கேற்றியவர்கள்
இன்று............
நீசர்களிடம்
நியாயத்தை கோரி நிற்கின்றனர்

சத்தியத்தைச் சாய்க்கச்
சதி செய்தவர்கள்
ஆராதிக்கப் படுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமாதான சமுத்திரம்

சமாதான சமுத்திரத்தால்
சூழப்பட்டிருந்த
எங்கள் ஊரில்
வந்திட்ட
வன் செயல்களால்
எம் வசந்தங்கள் எல்லாம்
எங்கோ.................
அடித்துச் செல்லப்பட்டுவிட்டன

## உறக்கமின்றி இருந்தவர்கள்

வன்செயல் ஓசை
ஒலித்த பொழுதுகளில்
இரவைக் கடத்த
படுக்கையறை சென்று
உறக்கமின்றி இருந்தவர்கள்
இன்று...................
அமைதித் தென்றலின் தழுவலில்
அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கிறார்கள்
நீண்ட இரவை வேண்டிக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணம் தான் வாழ்வு

பணம்தான் வாழ்வென்றாகிவிட்ட
இந்தச் சமூகத்தில்
பணக்காரர்களுக்குத்தான்
ஆசீர்வாதங்கள்
கிடைத்துக் கொண்டிருக்கிறது

இதனால் ............... இங்கு
நல்வர்களாய் இருப்பதற்கு
நாடுபவர்களும்...........
குறைந்து விட்டது

தலைமையும் பதவியும்
பணத்தின் பக்கமே
சார்கிறது

## நம் அரசியல்

முன்பு நம் அரசியல்
ஊரின் உயர்வுக்கு
அடிப்படையாய் அமைந்தது
இன்று ...........
அதன் அவலத்திற்கு
ஆசிர்வாதமாய் இருக்கிறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரப் போதை

அதிகாரப் போதையை
அதிகம் அருந்துபவர்கள் வாழ்வில்
சுமையாய் ஆவதும்
அப்போதைதான்

## கள்ளத்தின் கருவிடம்

உங்கள் உள்ளம்
கள்ளத்தின் கருவிடமாய்
இருக்கும் போது.........
வாயில் மட்டும்
வாய்மைப் பயிரை
எப்படி வளமாய் வளர்க்கின்றீர்கள்

நல்ல பாம்பை
நசுக்குவதன் மூலம்
அதனை
நாக்கிலிப் புழுவாய்
ஆக்கிவிட முயல்கிறீர்களே!

உங்கள் முடிவுகள்
பரிதாபத்தின் பக்கங்களில்
எழுதப்பட........
ஏன் எத்தனிக்கிறீர்கள்

உங்கள்
புன்னகை பூக்களின் உள்ளே
இருப்பதெல்லாம்
எமைக் கொல்லும்
நஞ்சுத் துளிகள்தானே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலவு காத்த கிளி

இங்கு எழுதப்படும்
சமாதானக் காகிதங்களில்
தீர்வு முகவரிகள்
சரியாக எழுதபடாததால்த்தான்
அவை.........
செல்ல வேண்டிய இடத்திற்குச்
செல்லாமல் இருக்கிறது

இதனால்
அமைதியில் அவாவுற்ற மக்கள்
இலவு காத்த கிளிகளாய்
இங்கே.........

## வேதனையின் அறுவடை

என் இதயப்பரப்பில்
உன்னைப் பற்றிய
உயரிய எண்ண விதைகளைத்தான்
என்றும் தூவினேன்
அது ........... விளைந்து
வேதனையின் அறுவடையாய்
ஆனபோதுதான்
உலகை உணர்ந்து கொண்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைவர்களின் உயர்ச்சி

எங்கள் தலைவர்கள்
உயர்ச்சியடைவது
அவர்களின்
உன்னத்த தன்மைகளால் அல்ல
எம்மினத்தின்
வேதனைகளின்
வேக்காடுகளால்த்தான்

எங்களின் துன்ப துயரங்கள்
அவர்களின்
வசந்தத்தின் வழியாகிவிட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல்

தேர்தல் என்பது என்ன?
வேட்பாளர்கள் என்று
வருவோர்க்கெல்லாம்
வரவேற்பளிக்கும் செயலா?

இதை..............
வேடிக்கை விளையாட்டாய் பார்ப்பது
நம் வாடிக்கையாகி விட்டது.

எங்கள் தலைவிதியை
நிர்ணியிக்கும் தேர்தலைத்
தவறாக அல்லவா
பயன்படுத்திக் கொண்டிருக்கின்றோம்

இதன் மூலம்
முன்னேற்றத்தின் முகட்டை
அடைய வேண்டிய நாம்
வறுமையின் வாசலுக்கல்லவா
சென்று கொண்டிருக்கிறோம்

வாக்காளப் பெருமக்களே
நீங்கள் சிந்தித்தால்
உயர்ச்சியின் உச்சத்தில்
சமூகத்தைச் சங்கமிக்கச் செய்யலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சிகளுக்கு அடிமைப்படுதலை
உடைமையாய்க் கொண்ட சமூகத்தில்
சிந்தைக்கு இடமில்லாமிருப்பது
சிறப்பற்ற தொன்றல்லவே

பிச்சைப் பாத்திரமாய்
இதுவரை ஏந்தப்பட்ட
தேர்தல்ப் பாத்திரம்
சமூகத் தேவைப்பசியைப் போக்கும்
அட்சய பாத்திரமாய்
இனியாவது .........
எங்களால் ஏந்தப்படுமா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேதனைப்படுகுழி

எந்தத் தலைவர்களாலும்
இந்தச் சமூகம்
ஏற்றம் கண்டதில்லை
ஆனால்
எல்லாத் தலைவர்களாலும்
ஏராளமாய் ஏமாற்றப்பட்டிருக்கிறது

எந்த வசந்தமும்
இந்தச் சமூகத்தை தழுவியதில்லை
மாறாக
எல்லாக் கொடுமைகளாலும்
தாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது

எந்த முன்னேற்றத்தின்
முகட்டை நோக்கியும்
அடி எடுத்து வைக்கவில்லை
அதன் பாதங்கள் படும் இடமெல்லாம்
வேதனைப் படுகுழியாகவே
இருந்து கொண்டிருக்கிறது

கண்ணீரைக் கடலாக்கிக் கொண்டு
இச் சமூகம்
காலத்தை கடத்திக் கொண்டிருக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு வார்த்தை

உளத் தடாகத்தைத்
தழுவும் தென்றல்
அன்பு வார்த்தையல்லவா!

துப்பாக்கிக்குப் பணியாத
உள்ளங்களைக் கூட
அடங்கிப்போகச் செய்யும்
அற்புத சக்தி கொண்டதல்லவா!
அது

எத்தனையோ
யுத்தப் பிரளயங்களிலிருந்து
மனுக்குலத்தை காத்துவரும்
மகத்தான அரணும் அதுதானே!

மகாத்மாக் காந்தியின்
வாய்ச் சிகரத்தில் ஊற்றெடுத்த
அந்த
அன்பு வார்த்தை மலர்தானே
இந்திய விடுதலையின்
வாசமாய்க் கமழ்ந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழுகையே அணிகலன்

வேதனைகளும் சோதனைகளும்
அவலங்களும் கண்ணீரும்
தொடர்ந்தேர்ச்சியாய் எங்கள் வாழ்வுக்குச்
சூட்டப்பட்ட வாகையாய் இருப்பதனால்
எங்களுக்கு எவரும்
விடுதலை பற்றி
விரிவுரை நிகழ்த்த வேண்டாம்

ஏனெனில்
மானுடக் கும்பலில்
அனாதைக் குழந்தைகள் நாங்கள்
அழுகையே எங்கள் அணிகலன்கள்
அதனால்...........
எங்கள் உணர்வெல்லாம்
எம் உரிமைபற்றியே இருக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைமைத்துவத் தாற்பரியம்

தலைமைத்துவத் தார்ப்பரியத்தின்
உயரிய தன்மைகள்
ஊரில்...........
உறங்கிப் போய் விட்டதனால்த்தான்
வருகின்ற எல்லோரும்
தலைமைத்துவ மாலையைத்
தங்களுக்குச் சூட்டிக் கொள்கின்றனர்.

பாவம்......... ஊர்

சீரழிந்து கொண்டிருக்கும்
அது.........
அடுத்த ஊரார்களுக்கு
வேடிக்கைப் பொருளாகிவிட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வறுமை வறட்சி

என்
ஏழ்மைப் பூண்டை
வறுமை வரட்சி
இன்னும்......... எத்தனை காலம்
வாட்டப் போகிறது?

வசந்த மழையை
வருஷிக்காமல்
இன்னும் எவ்வளவு காலம்
இருக்கப் போகிறது?

பட்டினி வெயில்
என் செழுமையை
இன்னும் எத்தனை காலம்
தாக்கப் போகிறது?

அதோ
என் நம்பிக்கை வானில்
விடா முயற்சி மேகங்கள்
செல்வமழை பொழியப் போகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று.........

நீதியின் நிலைக்களம்
இன்று
அநியாயத்தின்
அடைக்கலமாகிவிட்டதே!

சத்தியத்தின் சான்று
சதியின் கருவறையாய்
காட்சி தருகிறதே!

நம்பிக்கை நச்சத்திரம்
துரோகத்தின் உறைவிடமாய்த்
துலங்குகின்றதே!

பாசத்தின் பிறப்பிடம்
பகைமையின் அடித்தளமாய்
ஆகிவிட்டதே!

ஏழ்மையின் தோழமை
சீமான் தனத்தின்
சிம்மாசனமாய்த் திகழ்கிறதே!

உண்மையின் ஊற்று
பொய்மையின்
பொய்கையாகி விட்டதே!

விடுதலையின் வேட்கை
அடிமைத்தனத்தின்
ஆசிர்வாதமாய் மிளிர்கிறதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலட்சியத்தின் இருப்பிடம்
சந்தர்ப்ப வாதத்தின்
சகபாடியாய் உள்ளதே!

ஞானத்தின் ஊற்று
மூடத்தனத்தின் மூலதனமாய்த்
திகழ்கிறதே!

## முயற்சிச் சுடர்!

வறுமையின் இருள்கள்
முயற்சிச் சுடரால்
விரட்டப்படும் போது
எங்கள்
வாழ்க்கை வான்
செழுமை நட்சத்திரங்களால்
சிங்காரிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைவிதி மாறுவதெப்படி?

ஊர்ச் சுவருக்குள்
முடங்கிக் கிடந்து
அதுதான் அகிலம் என
அர்த்தம் கொண்டுள்ளவர்களே!
அயலிடங்கள் பற்றி
நீங்கள் அறிவது எங்ஙனம்?

நாட்டில்
ஊற்றெடுத்தோடும் நதிகளையும்
உயர் மலைகளையும்
கைத்தொழில்ப் பேட்டைகளையும்
பிரமாண்டமான கட்டிடங்களையும்
காணாதவர்கள் நீங்கள்...

நல்ல தலைமைகளால்
முன்னேற்றத்தின் முகட்டில் இருக்கும்
இடங்களையும்
நீங்கள் அறிய மாட்டீர்கள்.....

தாகம் மிகுந்த உயிர்களின்
பிராத்தனை எல்லாம்
தண்ணீருக்காகத்தானே!

பாலைவனத்தின் வேண்டுதல்கள்
பசுமை மிகு
மரங்கள் தானே!
வறுமைபட்ட ஊரின்
வரப்பிரசாரம்
செல்வச் செழிப்புத்தானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்திச் சிகரத்தின்
நிலமட்டத்திலிருக்கும்
எங்கள் ஊரின் தேவை எல்லாம்
தகுந்த தலைமை என்பதை
என்றாவது நீங்கள்
நினைத்துப் பார்த்தீர்களா?

## எதிர்மறை

இங்கு எல்லாம்
எதிர்மறையாய் இருக்கிறது

நல்வர்களாய்த்
திருடர்கள்

அறிஞர்களாய்ச்
அகரம் அறியாதவர்கள்

தியாகிகளாய்ச்
சுயநலமிகள்

சீதக்காதிகளாய்க்
கருமிகள்

வேண்டாதவர்களாய்
நல்லவர்கள்

இதனால்
செழுமைக்குப் பதிலாக
வறுமையே இங்கு
வளமாய் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோம்பல்க் களை

எம்
வாழ்க்கைக் களனியில் வளரும்
சோம்பல்க் களையை
சுறுசுறுப்பு நாசியினால்
அழித்தொழிப்போம்

அங்கே
எங்கள் முயற்சிகள்
எறும்புகளையும்
சோம்பல் மிக்கது எனச்
சொல்லும் அளவுக்கு ஆகிவிடும்

செயல்படுவதே
வாழ்க்கை என்பதன்
வரைவிலக்கணமாய் ஆகிவிடும்

## அவலங்களின் அடைக்கலம்

அவலங்களின் அடைக்கலமாய் இருக்கும்
என் சமூகமே!
அதன் காரணத்தை
இன்னும் ………… நீ
அறியாமல் இருப்பதனால்த்தான்
சோகங்களின் சொர்க்காபுரியாகச்
தொடர்ந்தேர்ச்சியாய்
இருந்து கொண்டிருக்கிறாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைதியே அதிசயிக்கிறது

இந்த நாட்டில்
அமைதி அரசோட்ச வேண்டுமென
அவாக் கொள்ளும் நாம்
மதங்களையும் மனிதங்களையும் மதிக்கும்
புதிய மார்க்கத்தைப் பின்தொடர்வோம்.

நாட்டில்
மொழிகளும் மதங்களும்
பிரிவினைகளின் ஊற்றாய்
பெருக்கெடுத்தொடும் போது
நாம்
அமைதிக்காய் நாற்றங்கால் இடுவது கண்டு
அமைதியே அதிசயிக்கிறது

## உணர்வுச் சோலை

என்
உணர்வுச்சோலையில்
இனிய கனிகள்
அதிகம் காய்க்கின்றன
ஆனால்
அவற்றைக் கனிய விடாமல்
பொறாமைப் பட்சிகள்
காய்யிலேயே கடித்து
நாசமாக்கிக் கொண்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித உள்ளங்களை அதிகம் அறிந்தவன்

தூய்மையில் கருக்கொண்ட நான்
துட்டத் தனங்களுக்குத்
துணை போகத் தெரியாதவன்

எனக் கென்றோர்
கொள்கை இருப்பதனால்
நான்.........
எந்தக் கொள்கையினதும்
ஏவலாளியும் அல்ல...

சத்தியச் சாகரத்தில்
நீந்து வதற்காகவே
குதித்தவன்...

அதிகாரத்தின் கரங்களுக்கு
அடிபணிதலை அறியாதவன்.

தலைவர்களின்
தான்தோண்றித் தனத்திற்கு
தலை சாய்க்காதவன்.

மனித உள்ளங்களை
அதிகம் அறிந்தவன் நான்
அதனால்
வெண்மை எல்லாம்
பால் என்று
என்றுமே பகரமாட்டேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயே!

தாயே!
என் வாழ்க்கை வானில்
தன் மதியாயப் பிரகாசித்துக் கொண்டிருக்கும்
உன்னால்த்தானே!.....
எளிலும், புகழும்
எனக்கு
உரித்தாய் இருந்து கொண்டிருக்கிறது.

தாயே!
உன் நினைவு
என் கண்களின் மழையாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யதார்த்தத்தைப் புரிந்துக் கொள்வோம்.

இனியாவது
யதார்த்தத்தைப்
புரிந்துக்கொள்வோம்

எங்கள்
தெரியாமையைத்
தெரிந்துக் கொள்வோம்

கடந்த காலத்தில்
எங்களைக்
கண்ணீர் சிந்த் வைத்த
கொள்கைகளைத்
தீக்கிரையாக்குவோம்

வருங்கால
வனப்புகளை
வடிவமைப்போம்.

தகுதிகளின் காலடியில்
பதவிகள்
பணிந்து வராவிட்டால்
பதவிகளையம்
பகிஷ்கரிப்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளியேற்றம்

அவர்களை
அவர்கள் பிறந்த
மண்ணை விட்ட விரட்டி
அயலூர்களுக்கு
  அகதிகளாய்
அனுப்பி விட்டோம் என்றா?
அகமகிழ்ந்துள்ளீர்கள்.

இல்லை......
ஒற்றுமைப்படுத்த முடியாத அளவு
பிரிவினைப்பட்டிருந்தஸ
அவர்களை
நீங்கள்
உங்கள் கொடுமைகளினால்
உங்கள் கொடுமைகளினால்
ஒரே இடத்தில்
ஒரே முகாமில் உங்களுக் கெதிராய்
ஒன்றுபடச் செய்துவிட்டீர்கள்
ஒன்றுதிரண்ட அவர்களின்
போராட்டத்தின் முன்
நீங்கள்
பொசுங்கிவிடுவீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவலத்தின் அறுவடை

அபிவிருத்தியின் அடைக்கலத்தில்
வாழ்வதற்காய்த்
தவமிருக்கும் மக்களே!

அபிவிருத்தியின் சிகரத்தில்
உங்களை...........
ஏற்றிவிடக் கூடிய
ஏணித் தலைமையை
நீங்கள் தேர்ந்தெடுப்பது எப்போது?

தொடர்ந்தேர்ச்சியாய்
வேதனைக்கு வழிகாட்டும்
தகுதியில்லாத் தலைமையின்
விளைநிலமாய்
நீங்கள் இருந்து கொண்டிருப்பதால்
உங்கள் அறுவடை
அவலமாய் இருப்பதில்
ஆச்சரியம் இல்லையே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்ச்சியைப் பார்க்க முடியாதவர்கள்

தங்கள் ஏற்றத்திற்காகப்
பதவிக்கு வரும்
தலைவர்கள் எல்லாம்
எங்கள் ஏற்றத்திற்காகப்
வந்ததாகத்தான்
விளம்பிக் கொண்டிருக்கின்றனர்.

எதுவும் அறியாத
எம் அப்பாவி மக்களும்
இவர்களை நம்பி
தமது கரங்களாலேயே
தம் கண்களைக் குத்திக் கொண்டிருக்கின்றனர்.

அதனால்....... அவர்கள்
தம் வாழ்வில்
உயர்ச்சியைப்
பார்க்க முடியாதவர்களாய்
ஆகிவிட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூகம் கண்ட கனவுகள்

அபிவிருத்தியின் அடைக்கலத்தில்
தன்னை அலங்கரிக்கச்
சமூகம் கண்ட கனவுகள்
அப்படியே அழிந்து போயின
தன் தலைமை
தகுந்ததாய் அமையாததால்

தன்னை உயர்ந்த
எத்தனிக்கும் அச்சமூகம்
அத்தலைமையை அழித்தொழிக்க
ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைமைகளும் தலைசாய்க்கும்

இளைஞர்களே!
உணர்ந்துகொள்ளுங்கள்
சமூகச் சோலையின் செழுமை
உங்கள் கரங்களில்த் தான் உள்ளது

செழுமை ஏற்படாத வரை
உங்கள்
எழுச்சிப் போராட்டத்தைக்
கைவிட்டு விடாதீர்கள்

நீங்கள் தெளிவு பெற்றுவிட்டால்
தலைமைகள் உங்களை
ஏமாற்றப் போவதில்லை
உங்களால்......... ஏமாறிவிடும்

சமூக எழுச்சியே
உங்கள் இலட்சியமானால்
தலைமைகளும்
உங்களுக்குத் தலைசாய்க்கும்

உங்கள்
எழுச்சியின் பாதையில்
போலித் தலைமைகள்
தடயங்களே இல்லாமல்
அழிந்து விடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அராஜகத்தின் வாரிசுகள்

புளியந் தோப்பில்
கரும்பின் இனிப்பை ருசிக்கக்
காத்திருப்பவர்களே!

கழுகுக்குஞ்சுக்காகக்
கோழி முட்டையை
அடைவைப்பவர்களே!

தோழமைக்காகக்
பாம்புக் குட்டியை
பஞ்சனையில் வளர்ப்பவர்களே!

புரிந்து கொள்ளுங்கள்
டார்வின் தத்துவத்தை
ஒவ்வோர் எச்சமும்
தம் மூதாதையரைப் பிரதிபலிக்கும் என்பதை

இரவின் விலாசம்
இருள் தானே!

அதிகார ஆடைகளால்
தங்களை மறைந்திருக்கும்
இந்த
அராஜகத்தின் வாரிசுகளுக்கா?
இன்னும்
வாழ்த்ததுப் பாடப் போகிறீர்கள்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏளனம் செய்யாதீர்கள்

தலைவர்களே!
இனிமேல் நீங்கள்
எந்தக் கட்சியையும்
எந்தக் கொள்கையையும்
ஏளனம் செய்யாதீர்கள்
எங்களிடம் இழிவாகவும் பேசாதீர்கள்

ஏனெனில்
நாளை ஓர் நாள்
நீங்களும்
அந்தக் கட்சியில்
அந்தக் கொள்கையில்
இணைந்து விடக்கூடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தகுதியிலாத் தலைமைப் போதை

எங்கள் சமூக அங்கம்
இனி என்றும்
தளர்ச்சியடைந்தே காணப்படும்

அது.........
தகுதியிலாத் தலைமைப் போதையை
அதிகம் அருந்தி விட்டது
அதனால்.......
தளர்ச்சி என்பது
அதற்குத்..
தவிர்க்க முடியாததாய் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புரட்சியின் புதிய முகவரி

என் சமூகத்தவர்களே!
நீங்கள்.....
பொறுமையாய் இருக்கும் வரை
எம் தலைவர்கள் உங்களை
அப்பாவிகள்
எதுவும் புரியாதவர்கள்
என்றே எண்ணட்டும்

நீங்கள்
கிளர்ந்தெழுந்த பின்பு
அவர்கள் அறிந்து கொள்ளட்டும்
புரட்சியின் புதிய முகவரி
நீங்கள் தான் என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூகத்தின் தீராத புற்றுநோய்

இந்தச் சமூகத்தின்
மடமைத் தனத்தை
என் மனதுக்குள்
எண்ணிப் பார்க்கின்றேன்

இங்கே
தலைவர் தெரிவென்பது
அர்த்தமற்ற செயலாகவே
அர்த்தம் பெற்றுவிட்டது

இது
இச்சமூகத்தின்
தீராத புற்றுநோய்...

தலைமைத்துவத்தை அலங்கரிக்க
தகுதியானோர் இருக்க
தலைமைத்துவத்தால் அலங்கரிக்கப்பட
ஆட்களைத் தேர்ந்தெடுக்கும்
அவலமே.... இங்கு
அரங்கேறிக் கொண்டிருக்கிறது.

இந்நிலை
இருக்கும் வரைக்கும்
இச்சமூகம்
கீழ்மைச் சிறையிலிருந்து
விடுதலை பெறவே முடியாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் அரங்கில்

நிர்வாண அரசியல் அரங்கில்
இலட்சிய ஆடை அணிந்த
அரசியல் வாதிகள்
அசிங்கமானவர்களாகவே நோக்கப்பட்டு
தொடர்ந்தோச்சியான தோல்விகளால்
ஆசீர்வதிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றனர்

## உணர்த்திடுவோம்

ஆயிரமாம் பொறாமைப் புயல்
அடித்தெம்மை வீழ்த்துதற்கு
முயன்றிடினும்
சரிந்திடவே மாட்டோம்
ஒரு நூறு விழுது கொண்ட
ஆலமரம் நாம் என்று
அவற்றிற்கு உணர்த்திடுவோம்.

## புரிந்து கொண்டேன்

இலட்சியப் போராட்டம் என்றுதான்
உன் படையில் இணைந்தேன்
உன் வெற்றிப் பெருவிழாவுக்கான
அழைப்பிதழ்
எனக்கு மறுக்கப்பட்ட போது தான்
என் தவறைப் புரிந்துகொண்டேன்

உன் வசந்தத்திற்காகக்
கூவியது..... குற்றமா?
'அதற்காக வா!
என் இறக்கைகளை ஒடிக்கின்றாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறுவடை

எங்கள்
போராட்டப் பாதைகளில்
பார்வையாளர்களாக.... இருந்தவர்கள்
இப்போ.....
வெற்றியின் விழாவிலே
கதாநாயகர்களாக்
காலூன்றியுள்ளார்கள்

வெற்றியின் பொழுதுகளில்
வேண்டப்படாதவர்களாய்
நாங்கள்

ஓ.... விதைத்தவனுக்கு
அறுவடை......
அருகதையற்றதா?

பெற்றவருக்குப்
பிள்ளை
உரிமையற்றதா?

வேசங்கள் தான்
வாசிகளின்
வாரிசுகளா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரத்தின் கரங்கள்

சமூக உணர்வில்
ஊறிப்போன வாலிபர்களே!
உங்கள் உணர்வுகள் உயிர்ப்படைய
உன்னத நெறியை
உணர்த்த மாட்டீர்களா?

போலித் தலைமைகளைப்
பொசுக்கும் தீச்சுடராய்
உங்கள் எழுச்சிகள்
உருப் பெற மாட்டாதோ!

தங்கள் சுகந்தத்திற்காக
சமூகத்தை.....
அவலத்தால் ஆசீர்வதிக்கச் செய்யும்
அதிகாரத்தின் கரங்கள்
உங்கள் எழுச்சியினால்
ஒடிக்கப்படாதா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயற்கையின் தீர்ப்புகள்

ஓர் உன்னத மனிதனின்
பயணப்பாதையில் பரப்பப்படும்
வஞ்சக முட்கள்
அவனின் இலட்சியத்தை
இல்லாமல் செய்து விடாது

சத்தியம்
பிரளயமாய்ப் பெருக்கெடுக்கும் போது
அதில் அமிழ்ந்து அழிவதெல்லாம்
அநீதியாகவே இருக்கும்

இங்கு
இயற்கையின் தீர்ப்புகள்
தாமதமாகவே வரும்
அதற்காக..... அவை
மறந்து விட்டதென
எண்ணி விடாதீர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலக நிகழ்வுகளில் உற்பொதிந்தே உள்ள
பலவாம் யதார்த்தத்தைப் பற்றி - நலமாய்
எனிலெழுந்த எண்ணத்தை ஏற்றகவி யாக்கி
இனிதளித்தேன் நூலாம் இதில்

மூதூர்- எம்.எம்.ஏ.அனஸ்

ISBN 978-955-41569-6-8

9 789554 156968

Printed by: ART - 0777695656

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org